**ரம்பேவ பிரதேச சபை**
**அநுராதபுர மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 25 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரம்பேவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) 05 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்காக செலுத்த வேண்டிய ரூபா 97,928 ஆன நிறுத்தி வைத்தல் தொகை கடன்பட்டோரின் கீழ் கணக்கீடு செய்த காரணத்தினால் மீளாய்வாண்டின் கடன்பட்டோர் அப்பெறுமதியால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு கட்டணத்திற்காக நிதிக்கூற்றுக்களில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) 04 அபிவிருத்தி செயற்திட்டங்களுக்குரிய நிலைமை அறிக்கை சமர்ப்பிக்கப்படும் வரை பிரதேச செயலகத்திலிருந்து கிடைக்க வேண்டிய மற்றும் சபையால் ஒப்பந்தக்காரருக்கு செலுத்த வேண்டிய ரூபா 2,451,085 கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்படாமையால் நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்கள் அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 09 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்காக சபைக்கு கிடைத்திருந்த ரூபா 366,000 கூட்டுத்தொகை கடன்பட்டோரின் கீழ் காண்பிக்கப்பட காரணத்தினால் கடன்பட்டோர் அப்பெறுமானத்தினால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) ரூபா 29,697,850 ஆன நிர்மாணக் கடன்கொடுத்தோர் மற்றும் ரூபா 29,728,674 ஆன நிர்மாணக் கடன்கொடுத்தோர் மீளாய்வாண்டின் மூலதன பெறுவனவு மற்றும் மூலதன கொடுப்பனவின் கீழ் கணக்கீடு செய்யப்படாமையால் மூலதன பெறுவனவு மற்றம் கொடுப்பனவு கணக்கு அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டில் நிறைவேற்றப்பட்ட 06 செயற்திட்டங்களின் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் பெறுமதி சரியாக கணக்கீடு செய்யாத காரணத்தினால் நிர்மாணக் கடன்பட்டோர் ரூபா 2,236,302 ஆலும் கடன்கொடுத்தோர் ரூபா 1,105,477 ஆலும் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட நிலுவை வீதவரி மீதி மற்றும் அதற்குரிய பெறுமதி பயன்பாட்டு ஆவணங்களில் காண்பிக்கப்படும் மீதிகளுக்கு இடையே ரூபா 113,057 ஆன வேறுபாடொன்று கண்டறியப்பட்டது.

**1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

வருடக் கணக்காக நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்படும் ரூபா 584,794 கூட்டுத்தொகையான 06 கணக்கு மீதிகளை மீளாய்வாண்டிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

வருடக் கணக்காக முன்கொண்டு வரப்படும் ரூபா 865,218 கூட்டுத்தொகையான செலுத்த வேண்டிய 09 மீதிகளை மீளாய்வாண்டிலும் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 63,931,275 ஆன 04 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் பரீட்சிக்க முடியாதிருந்தன.

**02. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,761,489 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டெழும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 2,091,434 ஆக இருந்தது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டியலிடப்பட்ட வருமானம். சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2017 சனவரி 01 இல் ஆரம்ப மீதி | 2017 இல் பட்டியலிடப் பட்ட வருமானம் | 2017 இல் சேகரிக்கப்பட்ட வருமானம் | | 2017 திசெம்பர் 31 இல் நிலுவை வருமானம் |
|---|---|---|---|---|---|
| | பெறுமதி | பெறுமதி | 2017.01.01 மீதியில் பெறுகை<br>பெறுமதி | 2017 பட்டியலிடப்பட்டது காசாக<br>பெறுமதி | பெறுமதி |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி | 468,920 | 645,000 | 104,981 | 365,812 | 643,128 |
| நீதிமன்றத் தண்டப்பணம் | 105,580 | 869,996 | - | - | 975,576 |
| கடை வாடகை | 54,000 | 628,900 | 54,000 | 613,400 | 15,500 |
| முத்திரைக் கட்டணங்கள் | 497,700 | 60,000 | - | - | 557,700 |
| கேள்வி மீது வாடகை | 1,917,801 | 2,427,101 | 88,625 | 2,427,101 | 1,829,176 |
| மொத்தம் | 3,044,001 | 4,630,997 | 247,606 | 3,406,313 | 4,021,080 |

**2.2.2 வருமானம் சேகரிப்பு**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) வீத வரி மற்றும் வரிகள்**

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 468,920 ஆன நிலுவைத் தொகையிலிருந்து மீளாய்வாண்டில் ரூபா 104,980 மாத்திரமே அறவிடப்பட்டிருந்ததுடன் நிலுவை தொகையை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**

மீளாய்வாண்டிற்காக முத்திரைக் கட்டணங்கள் திட்டவட்டமாக இனங்காணப்படாமல் ரூபா 60,000 மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2017 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 497,000 ஆக கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் மாகாண சபையிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**03. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) உப விதிகள்**

பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 28 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக வட மத்திய மாகாண சபையின் விடயத்திற்குரிய அமைச்சரால் 2016 மார்ச் 30 ஆந் திகதிய 1960/35 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி பத்திரத்தின் மூலம் வெளியிடப்பட்ட உப உறுப்புரைகளை சபை பின்பற்றியிருந்த போதிலும் அதனை சட்டரீதியாக்குவதற்காக சபையினால் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளுக்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) கைவிடப்பட்ட செயற்பாடுகள்**

கிராமிய அபிவிருத்தி பிரதேசங்களில் 1,000 கி.மீ வீதிகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரக்மல்கஹவெவ பிரதான வீதியில் இருந்து சியம்பலாகஸ்வெவ கிராமம் ஊடாக மீண்டும் ரக்தல்கஹவெவ பிரதான வீதி வரையான அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் ரூபா 4,108,979 இற்கு ஒப்பந்த நிறுவனமொன்றுக்கு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்படாமல் கையளிக்கப்பட்டிருந்ததுடன் 750 மீற்றர் தூரத்திற்கு ABC இட்டு குருணிக்கல் இடப்பட்டு மேற்பரப்பு தயார் செய்யப்பட்டிருந்தது. அதற்கு பின்னர் வீதி அமைத்தல் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

**(ஈ) திண்மக்கழிவு முகாமைத்துவம்**

பிளிசறு செயற்திட்டத்திற்காக வகைப்படுத்தப்படாமல் கொண்டுவரப்படும் கழிவுப்பொருட்களை வேறாக்குவதற்கு மேலதிக காலமொன்றையும் கிரயமொன்றையும் செலவிடுவதற்கு நேர்ந்திருந்ததுடன் இச்செயற்திட்டத்திலிருந்து உற்பத்தி செய்யப்படும் கொம்போஸ் உரத்தை விற்பனை செய்வதற்கு வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்**

நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை அறிந்து இருந்திருந்த போதிலும் அந்நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நீண்ட காலத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 மனித வள முகாமைத்துவம்**

29/2014 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு முரணாக 14 ஊழியர்கள் 2014 ஒக்தோபர் 24 ஆந் திகதி முதல் சேவையில் ஈடுபடுத்தி 2016 மே 31 ஆந் திகதி வரை ரூபா 7,602,604 தொகை சம்பளமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**குறைவாக பயன்படுத்திய விளைவற்ற சொத்துக்கள்**

சபைக்குச் சொந்தமான ரூபா 856,800 பெறுமதியான மூன்று இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாதிருந்த காரணத்தினால் வருடக் கணக்கில் விளைவற்றுக் காணப்பட்டன.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

முறையான எதிர்வுகூறல் ஒன்று இல்லாமல் பாதீடு தயாரிக்கப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டில் 06 வருமான விடயங்கள் மற்றும் உள்ளவாறான வருமானத்திற்கு இடையே 12 சதவீதத்திலிருந்து 62 சதவீதம் வரையான விலகலொன்றும் 05 செலவின விடயங்களில் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான செலவினங்களுக்கு இடையில் 22 சதவீதம் முதல் 64 சதவீதம் வரையான விலகல் அவதானிக்கப்பட்டன. அதன் பிரகாரம் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்படாமை அவதானிக்கப்பட்டது.

**4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு**

2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் மூலம் விநியோகிக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் | | இனங்காணப்பட்ட குறைபாடுகள் |
|---|---|---|
| (அ) பெறவேண்டிய செலுத்த வேண்டிய கணக்குகள் | | முறைப்படி இனங்கண்டு தீர்வுசெய்யப்படாமை. |
| (ஆ) உள்ளகக் கட்டுப்பாடு | i | உள்ளகக் கணக்காய்வு செயற்படுத்தப்படாமை |
| | ii | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் முறையாக நடாத்தப்படாமை. |
| (இ) திண்மக்கழிவுப்பொருள் முகாமைத்துவம் | | உக்காத மற்றும் கழிவுப்பொருள் மீள்சுழற்சி நடவடிக்கை மேற்கொள்ளப்படாமை. |
| (ஈ) ஊழியர் முகாமைத்துவம் | | வெற்றிடங்களை பூர்த்தி செய்யப்படாமை. |